www.tamilarangam.net

# தமிழ் ஈழ விடுதலை இயக்கம்

# Thamil Eelam Liberation Organization

அன்புடையீர்,

## தமிழ் ஈழ விடுதலைப்போராளிகளின் கரங்களை வலுப்படுத்துங்கள்

தமிழ் ஈழம், ஸ்ரீலங்கா பாஸிஸ அரசின் இராணுவமுற்றுகையின் கீழ் முடங்கியுள்ளது. அராஜக அரசின் கூலிப்படைகளின் கண்மூடித்தனமான கையாலாகாத்தனமான துப்பாக்கி வேட்டுக்கள் நாளுக்கு நாள் தமிழ்மக்களைக் கோரமாகப்பலிகொள்ள வைக்கின்றன. தமிழ் ஈழ மக்கள் அகதிகளாகத் தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்து கொண்டிருக்கின்றனர்.

இனவெறி அரசின் மரணப் பிடியில் தத்தளித்துக் கொண்டிருக்கும் தமிழ் மக்களை அழிவிலிருந்து காப்பாற்றல், உலகில் பரந்து வாழும் அனைத்துத் தமிழ்பேசும் மக்களதும், மனிதாபிமானமுள்ள உலக மக்களதும் வரலாற்றுக் கடமையாகும்.

தற்போதைய சூழ்நிலையில் தமிழ் மக்களது இறைமைகளை மீட்கும் முயற்சியானது. வலுவான பிரச்சாரத்துடன் கூடிய சக்திமிக்க ஆயுதப் போராட்டத்தினால்தான் சாத்தியமென்ற தமிழ் ஈழ தேசபிதா தங்கதுரையின் கூற்றுக்கிணங்க, இதற்கான தயாரிப்புக்களுடன் நமது இயக்கம் களமிறங்கியுள்ளது.

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டமானது, சிறிலங்கா இனவெறி அரசுக்கும், தமிழ் பேசும் மக்களுக்குமிடையேயான போராட்டமாகும். இதில் சிறிலங்கா இனவாத அரசின் பின்னணியில் ஏகாதிபத்தியங்கள் அணிவகுத்துள்ளமையால் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களது பிரச்சினை சர்வதேச சமயப்படுத்தப்பட்டு, தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கான சர்வதேச ஆதரவு களைத் திரட்டவேண்டியது கட்டாயமாகின்றது.

இதே வேளை, சிறிலங்கா அரசு, சாவதேச பயங்கரவாதிகளினால் பலம் பெற்று தமிழ் பேசும் மக்கள் மீது மூர்க்கத்தனமாக நடந்துகொள்கின்றது. இத்தகைய கொலைவெறி அரசை முறியடிக்க தமிழ் ஈழ விடுதலைப் போராளிகளின் கரங்கள் பலமாக வலுப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

எனவே. அழிந்து கொண்டிருக்கும் இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களது விடுதலையில் ஆர்வமுள்ள அனைவரும் தம்மால் இயன்ற நிதிஉதவியோ, பொருளுதவியோ வழங்குவதுடன் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் பற்றிய பிரச்சார வேலைகளில் ஈடுபட்டு, தமிழ் ஈழ விடுதலைப் போராடடத்தில் தங்களது மேலான பங்களிப்புகளை வழங்குமாறு அனபுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நமது இயக்கமானது, தமிழ் ஈழ தேசபிதா தங்கத்துரை, தளபதி குட்டிமணி போன்றோரால் ஆரம்பிக்கப்பட்டு, இப்போது தலைவர் சிறி சபாரெத்தினம் அவர்களால் வழிநடத்தப்பட்டு வருகின்றது. மேலும், சர்வதேச பயங்கரவாதிகளுக்கு எதிரான தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை வலுவாக்கும் முயற்சியில், முற்போக்கு இயக்கங்களான ஈழ புரட்சிகர அமைப்பு (EROS), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) என்பவற்றுடன் இணைந்து ஈழத் தேசிய விடுதலை முன்னணி (ENLF) எனும் பொது அமைப்பை ஏற்படுத்தி, ஏனைய இயக்கங்களையும் ENLF இன்கீழ் அணிவகுத்து வலுவான போராட்ட முன்னெடுப்புக்குத் தயாராக அழைப்பு விடுவித்துக் கொண்டிருக்கின்றது.

அன்மையில் நமது போராளிகளால் நடத்தப்பட்ட சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதல், முருகண்டி, யாழ்தேவி புகையிரதத் தாக்குதல், என்பவற்றால் அரச இயந்திரங்கள் இஸ்தம்பிதமாயின.

நமது இயக்கத்திற்கு நிதியுதவி நல்கும் அன்பர்கள் பின்வரும் வங்கிக் கணக்கு மூலம் தங்கள் உதவிகளைச் செலுத்துமாறு வேண்டுகின்றோம்.

**K. ஆனந்தன்,**
A/C - 11506 இந்தியன் ஓவர்சீயஸ் வங்கி,
விருகம்பாக்கம் கிளை, சென்னை-600 092.

936, ரி. வி. எஸ். அவென்யூ
அண்ணாநகர் மேற்கு, சென்னை-600 101.

'தமிழ் ஈழம் மலர்வது நிதர்சனமான உண்மை,
அதை யாராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது'
—தமிழ் ஈழ தேசபிதா தங்கத்துரை

நன்றி!

-பிரச்சார வெளியீட்டுப் பிரிவு
தமிழ் ஈழ விடுதலை இயக்கம்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்